பககம்: எட்டு
விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 25 செவ்வாய்க்கிழமை (9-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 21

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
சர்மிலன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,
ஊரெழு
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

## யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் எழுச்சிக்கு மாணவர்கள் மத்தியில் அமோக வரவேற்பு

தமிழ்மக்களின் அபிலாசைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் வகையில் யாழ்குடா நாடு தழுவிய ஒருமித்த கருத்தை திரட்டும் வகையில் பல்கலைக்கழகசமூகத்தினரால் ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் எழுச்சிநிகழ்வுக்கு தமிழ்மக்கள் மத்தியில்ஆதரவுபெருகி வருவதாக நிகழ்வின்ஏற்பாட்டாளர்கள்தெரிவித்துள்ளார்கள்.

இம்மாதம்17 திகதி பல்கலைக்கழகசமூகத்தினாலும் 47மனிதநேயஅமைப்புக்களினாலும் நடத்தப்பட இருக்கும்எழுச்சி நிகழ்வுக்கு முன்னோடியாக பாடசாலைகள்தோறும் திட்டமிட்டபடிமேற் கொள்ளப்பட்டு வரும் பிரசார வேலைகள் வெற்றியளித்திருப்பதாகவும் பாடசாலைமாணவ சமூகம் இவ்எழுச்சியில் தங்களையும் இணைத்து கொள்ளுமாறு கோரிவருவதாவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டின்குக் கிராமங்களுக் கெல்லாம் பல்கலைக் கழகசமூகத்தினரால் தெரிவு செய்யப்பட்ட பல் வேறு குழுக்கள் இவ் எழுச்சி போர் தொடர்பாக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும், அதற்குகிராமமட்

(08 பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டு மக்களுடன் செய்மதி மூலமான உரையில்

# புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்தார்!

### புலிகளைபேச்சுக்கு வருமாறும்அழைப்பு



(கொழும்பு விஷேட நிருபர்)

விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தை மேசைக்கு வந்தால் அரசாங்கம் யுத்த நிறுத்தம் குறித்து பரிசீலிக்கத்தயாராகவுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு புலிகள் இணக்கம் தெரிவித்தால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து தீர்மானிக்கலாம்,

அரசாங்கம் யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வரவே விரும்புகிறது. அது பேச்சு வார்த்தையின் மூலமே கொண்டுவரப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு குடாநாட்டு மக்களுடன் செய்மதி மூலம் தொடர்பு கொண்டு உரையாற்றும் போது கூறியுள்ளார்.

யாழ். குடா நாட்டு மக்களுடன் செய்மதி மூலம் தொடர்பு கொண்டு ஜனாதிபதி உரையாற்றியமை சம்மந்தமாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவித்தலின் மூலம் வடபகுதி மக்களைத் தொடர்ந்தும்அழிவுப் பாதையில் கொண்டு செல்வதையே விரும்புகிறது. அர

(8ஆம் பககம் பார்க்க்)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டபேரணியில் பொலிஸார் தடியடிப் பிரயோகம்!

### 25பேர்பருகாயம்; ஒருவர்நிலைஆபத்து

(கொழும்பு)

நோர்வே அரசின்சமாதான முயற்சிகளைக் கண்டித்தும் விலைவாசி அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் நேற்று கொழும்பு மாநகரில்,ஜே. வி பி.யினரால் மேற்கொள்ளப்பட்ட,ஆர்ப்பாட்ட பேரணியில் எற்பட்ட அசம்பாவிதத்தில் 25பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொழும்பு புறக்கோட்டை அரசமரத்தடிச் சந்தியில் ஆரம்பமான மேற்படி ஆர்ப்

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.சி.ஆர்.சியின் உதவியுடன்

## புலிகளின் பாதுகாப்பிலிருந்த 16மீனவர்கள் வந்தனர்!

(ஈச்சமோட்டை)

வன்னியில் விடுதலைப்புலிளின்பாதுகாப்பில் தங்கியிருந்த குருநகர்பகுதியைச் சேர்ந்த 16மீனவர்கள்நேற்று சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

கடந்தவருடம் நவம்பர் டிசம்பர் மாதப்பகுதியில் குடாக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் காணாமல் போனதாகக் கருதப்பட்ட பிரஸ்தாப மீன வர்களே நேற்றுயாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர்களாவர்.

விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிலிருந்த மேற்படிமீனவர்கள் மல்லாவியில் உள்ள ஐ.சி.ஆர்.சி அலுவலகத்தில் புலிகளால் ஒப்படைக்கப்பட்டனர் பின்னர்இவர்கள் ஐ.சி.ஆர்.சி படகுமூலம்கூட்டி

(8ஆம் பக்கம் பார்க்க)

**பிந்தியசெய்தி**

## நோர்வே தூதுவர் இந்தியா புறப்பட்டார்?

(இலண்டன்)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்நோர்வே யிலிருந்து புறப்பட்டுள்ளதாக இலண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்இன்று தனது அதிகாலைச் செய்தியில் தெரிவித்துள்ளது அவர் எங்குசெல்கிறார் என்றவிபரம் வெளியிடப்படவில்லையாயினும் இந்தியாவுக்குச் சென்றபின் கொழும்பு வரலாம் எனவும் அரசியல் அவதானிகள் ஊகம் வெளியிட்டுள்ளனர். (ந)

## பருத்தித்துறை மீனவர்கள் 10 பேரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை சக்கோட்டை கடற்பகுதியில் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச்சென்ற 10 மீனவர்களைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை சக்கோட்டைப் பகுதியில்இருந்து நாலு கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

மீனவர்கள் சென்ற நான்கு கட்டுமரங்களும் கரை சேர்ந்துள்ளது.

இதேவேளை இம் மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. (ம)

## காணாமல் போன 10மீனவர்களின் விபரம்

சக்கோட்டைப் பகுதியில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச் சென்ற 10பேரைக் காணவில்லை என வளலாய்கிராமிய கடற்றொழிற்கூட்டுறவுச் சங்கசமூகஅபிவிருத்தி அமைப்பு பருத்தித்துறை ஈ.பி.டி.பி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

காணாமல்போனோர்விபரம் வருமாறு இயக்கரியத்போசப் பீற்றர் அருளானந்தம்அந்தோனிப்பிள்ளை அருளானந்தம்யோசப்பீற்றர் ஜெயரத்தினம்அன்ரன்ஜெயக்குமார் ஜெயரத்தினம்அன்ரன் யோசப் செல்லையாபன்னீர் செல்வம் டேவிட்றிகன் கபிரியேற்பிள்ளை வரப்பிரகா

(8ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகநபரை சாட்சி அடையாளம் காட்டவில்லை

(மந்திகை)

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற படு கொலைச் சம்பவம் தொடர்பாக அணிவகுப்பு நேற்றுக் காலை நடைபெற்ற போது சந்தேக நபரான முதியான் சலாகே செனிவிரத்தின பொன்னுத்துரை மகேஸ்வரனால் அடையாளம் காட்டப்பட வில்லை

சாவகச்சேரி உத்தியோகப்பற்றற்ற நீதவான் சுப்பிரமணியம்கந்தசாமி முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்ட போது இவர் அடையாளம் காட்டப்படவில்லை இதனை அடுத்து நீதவான் அ. பிரேம்சங்கர் 16ம் திகதி வரை சந்தேக நபரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### கவிஞர் பரந்தாமனின்
# ஆங்கில கவிதை நூல் "நுரை"
## பற்றிய ஓர் ஆய்வு நோக்கு

புத்தாயிரம் ஆண்டு மலர்ந்து, இற்றைவரையான காலப்பகுதிகளில் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளன இவற்றுள் ஆங்கில மொழிமூலம் படைக்கப்பட்ட நூல்கள் மிகச் சொற்பமே எனக் கூறலாம். இவற்றுள் யாழ். பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரியும் வ. பரந்தாமனின் நுரை (Sbume முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது.

### 'வடக்குக் கடலிற்கு ஓர்கீதம்'

நாட்டின் வரைபடத்தின் உச்சியில்
நிற்பது போல் –
கருமைபடர்ந்த கடற்பாறைகளில்
அமர்ந்தபடி .
என் காலடியில்...
பச்சைச் சிறகுகொண்ட ..
கடல் அல்காக்கள் - பொன்மயமான
தேவதைகள் போல்...
நீச்சலடிக்க...
முடிவில்லா - தொடுவானம் வரை...
நீண்டு பரந்த கடலே...
மாலையில் வந்து விழும் சூரியப்பந்தை
ஒரு நீலப் புன்னகையுடன்
வரவேற்று - உன் பரந்து, விரிந்த
உப்புத் தன்மை கொண்ட
வாசனைத் திரவியத்துடன் கூடிய
முகத்துடன் ..
ஓசை எழுப்புகின்றாய்!
என்றும் அழிக்கப்பட முடியாத
உனது ஓசை...
நோயுற்ற நிலையில் உள்ள .
இத்தரையில் இருந்து என்னை
விடுவித்து பறக்க வைக்கின்றது.

**நூல்: நுரை ஆசிரியர்: வ. பரந்தாமன்**

பல்வேறுவகைப்பட்ட கருப்பொருட்களை மையமாகக் கொண்டு கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. கவிஞர் தான் அனுபவித்த, அறிந்து கொண்ட பல நிகழ்வுகளை தனது படைப்பாற்றலுக்கு மூலப்பொருட்களாகக் கையாண்டுள்ளார்.

இக்கவிதைத் தொகுதி எல்லாமாக 28 ஆங்கிலக் கவிதைகளை அடக்கியுள்ளது. ஈழத்தின் இரு பிரபல கவிஞர்கள் பரந்தாமனின் கவிதைகள் பற்றிய தன்மைகளை விமர்சித்துள்ளனர்:

### சு. மோகன்

கவிஞர் சோ. பத்மநாதன் இவரது கவிதைகள் பற்றிக் குறிப்பிடுகையில்,

''கவிதை, அதன் அடிமட்டத்தில் வாழ்க்கையின் விமர்சனமே. வடக்கில் வாழ்க்கை என்பது ஒரு புதிர் பல்வேறுபட்ட சிக்கல்களை உள்ளடக்கியது பரந்தாமனின் கவிதைகள் இச்சிக்கல்களை எடுத்தியம்புகின்றன'' என்று கூறியுள்ளார்

கவிஞர் இ முருகையன் இக் கவிதைகள் பற்றிக் குறிப்பிடும் பொழுது ''வேகமாக வளர்ந்துவரும் மனிதக் கூட்டமைப்புக்களிற்கும், உணர்வுகளிற்கும் மத்தியில் ஒரு கவிஞனின் தொழிற்பாடு என்பது மேலும் மேலும் சிக்கல் நிறைந்ததாக மாறுகின்றது. இவற்றிற்கும் மத்தியில் பரந்தாமன் தனக்கென ஒரு பார்வையைத் தெரிவு செய்துள்ளார். தனது வாசகர்களைச் சென்றடையக் கூடிய விடயங்களை எடுத்துச் சொல்லியுள்ளார் இதன்மூலம் இவரது கவிதைகள் நன்றாக அமைந்துள்ளன. வெற்றிகரமாக அவை தமது பணியைச் செய்கின்றன.''

இவ்விரு விமர்சனங்களிற்கு மத்தியில், பரந்தாமனின் கவிதைகளிலொன்றானவடக்குக் கடலிற்கு ஓர் கீதம் என்ற கவிதையின் முதல் பகுதி கீழே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது

கவிஞர் பரந்தாமன், வடக்கு எல்லைக் கடலின் அழகை வர்ணிப்பது மாத்திரமல்ல, அதன் நிரந்தர, உண்மையான அழகை வியக்கின்றார் இளம் ஆங்கிலக் கவிஞர் கீற்ஸ் (Keats) இன் கவிதைகளை ஆர்வத்துடன் பயின்ற தன் அறிவு இக்கவிதை மூலம் வெளிக் காட்டப்படுகின்றது

சுருங்கக் கூறின் இக்கன்னி முயற்சியானது, நிச்சயம் வரவேற்கப்படக்கூடியதொன்றாகும். பிறமொழியில் எமது உணர்வுகள் வெளிப்படுத்தப்படும் பொழுது உலகளாவிய ரீதியில் சிந்தனையைத் தூண்டுகின்றதென்றால் மிகையாகாது.

### மரண அறிவித்தல்

**நவசிவாயம் சுப்பிரமணியம்**

(இளைப்பாறிய ஊழியர் யா/மாநகர சபை)

பூநகரி வெட்டுக்காட்டைப் பிறப்பிடமாகவும், அரியாலை சுப்பிரமணியம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நவசிவாயம் சுப்பிரமணியம் 08.01.2001 திங்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக்கணவரும், இராசமணி, புவனேஸ்வரி, தனபாலசிங்கம், புஸ்பவதி, சுந்திராணி, சந்திரா (ஜேர்மனி), இரவீந்திரன் (மேகாஸ் வீடியோ, இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகராசா, சண்முகராஜா, தவமணி, தொம்சன் செல்லத்துரை (ஓய்வூதியர் யா/மாநகர சபை), பத்மநாதன் (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை, உமையம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 56 கே. கே எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

தற்காலிக முகவரி
56 கே.கே. எஸ். வீதி,
கொக்குவில், சந்தி,
கொக்குவில்.

N.S இரவீந்திரன் (மகன்)
மேகாஸ் வீடியோ
இலங்கை மின்சார சபை
(2094)

### பிரிவுத்துயர் பகிர்வு

**திருமதி புஸ்பராணி ஜெயமோகன்**

சிறம்பன் மலேசியாவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி ஜெயமோகன் 06.01.2001 அன்று லண்டனில் அகால மரணமடைந்துவிட்டார்.

இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல் **தி.திருநாவுக்கரசு** மாமனார்)

**விசுவலிங்கம் பரமலிங்கம்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)

மாதகல்மேற்கைச் சேர்ந்த விசுவலிங்கம் பரமலிங்கம் 05.01.2001 அன்று திருச்சியில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் தமிழ் நாடு திருச்சியில் நடைபெற்றன.

தகவல் **டாக்டர் சி குமாரவேள்** (பெறாமகன்)

**திருமதி இராசதுரை அருள்தவம்**

காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசதுரை அருள்தவம் 07.01.2001 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல் எஸ். சதீசன் (மகன்)

**திருமதி நாகரத்தினம் சற்குணம்**

சங்குவேலியையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரத்தினம் சற்குணம் 07 ஆம் திகதி காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல் ச.விக்னேஸ்வரமூர்த்தி (மருமகன்)

### மேளக்கச்சேரி

காஞ்சிகாம கோடி ஆஸ்தான வித்துவான்கள் மாம்பலம் எம். கே. எஸ் சிவா சகோதரர்களின் நாதஸ்வரக்கச்சேரி இன்று இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில் முன்றலில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது ஈழத்துத் தவில் கலைஞர்கள் லயஞானரட்ணம் கே. நித்தியானந்தன் தவில் நாதசுரபி கே. சிவகுமார், லயஞானகுபேரபூபதி தட்சிணாமூர்த்தியின் மகன் ரி. உதயசங்கர் ஆகியோர் இணைந்து வாசிக்க உள்ளனர், (வ)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

சிறுப்பிட்டி ஞானவைரவர் கோயில் பரிபாலன சபையினரும், அடியார்களும் பிரம்மஸ்ரீ க. ஜெயராமக்குருக்கள் அவர்களின் சேவையைப் பாராட்டி (09-01 2001) இன்று நடைபெறும் கௌரவிப்பு விழா அனைவருக்கும் மகிழ்ச்சியானதாகும். இந்த உபசார விழாவை நிகழ்த்தும் பரிபாலன சபையினரும், அடியார்களும் உபசரிப்பு பெறும் குருக்கள் ஐயா அவர்களும் சிறப்புடன் வாழ வைரவப் பெருமானை பிரார்த்தித்து மகிழ்வுறுகிறோம்.

**சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக்குருக்கள்**
**சுபாங்கினி**
**சிவஸ்ரீ ச. லம்போதர குமாரசாமிக்குருக்கள்**
**கார்த்திகா**
**கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்**
**சுன்னாகம்** (2092)

**சக்தி F.M அனுசரணையுடன்**
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
இடைநிலை விஞ்ஞானக் கழகம் நடத்தும்
**கற்றல் சாதன உற்பத்திப் போட்டி**

## எதிர்வரும் தைப் பொங்கல் திருநாளில்

## விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியும் வினாடி வினாப் போட்டியும்

(பாடசாலை குழுக்கள் மட்டும்)

※ மிகந்தரமான பரிசில்களுடன் கூடிய போட்டி நிகழ்ச்சிகள்
(பங்குபற்றும் சகலருக்கும் தகுதியான பரிசில்கள் உண்டு)

※ விரும்பிய யாவரும் பங்குபற்றலாம்

காலம்: 14 - 1 - 2001
இடம்: கல்லூரியின்- 'லிஞ்' மண்டபம்
போட்டிக்கான பிரிவுகள்

★ பிரிவு 1 ஆண்டு 6 8 வரை
★ பிரிவு 2 ஆண்டு 9-11 வரை
★ பிரிவு 3 ஆசிரியர்களுக்கானது
★ பிரிவு 4 திறந்த போட்டி

**நிபந்தனைகளும் நோக்கங்களும்**

**பிரிவு 1**
ஆண்டு 6 7,8, சுற்றாடற் கல்வியும் விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் பாடத்திட்டத்திற்கு அமைய மாணவர் மேற்கொள்ளக் கூடிய கல்வி மேம்பாட்டு அமைப்புக்களில் ஒன்றாக அமைதல் வேண்டும்.

**பிரிவு 2**
ஆண்டு 9.10,11 விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் பாடத்திட்டத்திற்குரிய மேம்பாட்டு அமைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்யலாம்.

இரு பிரிவுகட்கும்
★ மாதிரி உருவங்கள்
★ செய்து காட்டல் அமைப்புக்கள்
போன்றஆக்கங்கள் விரும்பப்படுகின்றன

**பிரிவு 3**
விஞ்ஞானம் தொடர்பான கற்பித்தல் சாதனம் ஒன்றை தயாரிக்கக்கூடிய யாவரும் பங்கு பற்றலாம்,

**பிரிவு 4**
ஆண்டு 6 தொடக்கம் 11 வரை பயன்படுத்தக் கூடிய கற்பித்தல் சாதனம் ஒன்றை ஆர்வம் உள்ள யாவரும் வடிவமைக்கலாம்.

அனைத்து ஆக்கங்களும்
**13-01-2001 அன்று யாழ் மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடத்தில் அமைந்துள்ளவிஷேட அலுவலகத்தில் பி.ப. 2:00 மணிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.**

மேலதிக விபரங்கள் தேவைப்படின்
''விஞ்ஞான உபகரண ஆக்கப் போட்டி''
யாழ் மத்தியகல்லூரி
யாழ்ப்பாணம்.
என்னும்முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல: 2184**

இடை நிலை விஞ்ஞானக் கழகம்
யாழ் மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.
(கி/1315)

# திக்கம் வடிசாலைக்கு 100 இலட்சம்

## அமைச்சர் டக்ளஸ் ஒதுக்கீடு

### கலந்துரையாடலில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் இயங்கும் திக்கம் வடிசாலையின் மேம்பாட்டிற்காக 100 இலட்சம் ரூபா மூலதன நிதியினை டனை அபிவிருத்திச் சபையூடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளார்.

வடமராட்சிபனை–தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த திக்கம் வடிசாலை தற்போது வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு-கிழக்கின் தமிழர்விவகாரம் மற்றும் இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின்பொறுப்பின் கீழ் உள்ள பனை அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்து திக்கம் வடிசாலை ஊழியர்கள் அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

இச்சந்திப்பின் போது பழைய நிர்வாகம் தொழிற்சாலைக்கு இருந்து வந்த வரிவிலக்கினை சரிவரப்பயன்படுத்தவில்லை என்றும் இதனால் வரிவிலக்கினை நாம் மீளவும் பெற்று வடிசாலையின் அபிவிருத்திக்கு அதனைப் பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது சாராய உற்பத்திக்கு போட்டி நிலவி வருவதால் எமது வடிசாலையின் உற்பத்தி மிகுந்த தரமானதாக இருக்க வேண்டும். இதற்கு கொழும்பிலிருந்து உரிய தொழில் நுட்பங்களை வரவழைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அரசாங்க அதிபர் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர், நிர்வாகிகள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் பனை-தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

யாழ். மா. சபை உறுப்பினருக்கு

## கொட்டடி மரக்கறி வியாபாரிகள் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி மீன் சந்தைக்கு முன்பாக வீதி ஓரத்தில் மரக்கறி வியாபாரம் செய்து வந்த சிறு வியாபாரிகள் ஒன்றிணைந்து தமது நிலையை விளக்கி யாழ். மாநகராட்சி மன்ற உறுப்பினர் செல்லையா விஜயரட்ணத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் நாம் எவ்வித முதலுமின்றி பெரும் வியாபாரிகளிடம் கடன்பெற்று சிறுவியாபாரம் செய்து எமது குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றோம்.

எமது குழந்தைகளின் கல்வி எதிர்காலம் என்பவற்றுக்கும் இச்சிறு வருமானத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றோம்.

அத்துடன் நாம் அனைவரும் இடம்பெயர்ந்து, வாழ வழியற்ற நிலையிலேயே இம் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

இது விடயத்தை கருத்தில் எடுத்து எமது வாழ்வு நிலைக்கேற்ப சம்பந்தப்பட்ட பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறின்றி நாம் வியாபாரம் செய்ய ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் மேற்படி விடயத்தினை யாழ் மாநகர சபை முதல்வரின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. (உ)

### நேற்றைய தினம்

## மட்டுப்படுத்தப்பட்ட பேரூந்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரின் பேரூந்து சேவைகள் நேற்றைய தினம் மட்டுப்படுத்தப்பட்டளவில் இடம்பெற்றமையை அவதானிக்க முடிந்தது.

இதனால் பாடசாலை மாணவர்கள் அரச ஊழியர்கள் மற்றும் ஏனையபொதுமக்கள் தமது பயணத்தினை மேற்கொள்வதற்காக நீண்ட நேரம் வீதியில் காத்து நின்றமையை காணக்கூடியதாக இருந்தது.

எனினும் பாடசாலை பேரூந்து சேவைகள் வழமை போல் இடம்பெற்றதாகவட-பிராந்தியப் போக்குவரத்து சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் லங்கா முடித்த கப்பலில்வந்த பயணிகள் ஆயிரத்து 200 பேர் நேரம் கடந்தமை காரணமாக கடந்த ஞாயிறன்று தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டதனால் அவர்களை ஏற்றிவரும்சேவையிலும்,

நேற்று புறப்பட்ட லங்கா முடித்த கப்பலில் பயணம் செய்யும் பயணிகளை ஏற்றிச் செல்லும் சேவையிலும், 20 வரையான பேரூந்துகள் ஈடுபடுத்தப்பட்டதனால் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவைகள் இடம்பெற்றதாக தெரிவித்துள்ளன.

இதேவேளையில் பேரூந்துகளிற்காய் காத்துநின்ற மாணவர்கள் சிலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியமையையும் அவதானிக்க முடிந்தது. (க–உ)

### வடக்கு-கிழக்கில்

## மாதிரி கிராமங்கள் அமைக்க முயற்சி

(கல்வயல்)

வடக்கு-கிழக்கு மாகாண விவசாய, காணி, கால் நடை அபிவிருத்தி நீர்ப்பாசனகடற்றொழில் அமைச்சால், இவ் ஆண்டு ஆறு மாவட்டங்களில் விவசாய மாதிரிக் கிராமங்கள் நிறுவப்பவுள்ளன.

அதன்படி, வவுனியாமாவட்டத்தில் இலுப்பைக்குளம், மயிலங்குளம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மாதிரிக் கிராமமும், மன்னார் மாவட்டத்தில் நானாட்டானிலுள்ள மடுக்கரை கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொருமாதிரிக் கிராமமும் 300 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக அமைவதோடு அதில் குடியமர்கின்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒரு ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு 250 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவதுடன் மீதி 50 ஏக்கர் நிலம் பொது வசதிகள் ற்றும் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்படும்.

அமைக்கின்ற அம் மாதிரி விவசாயக் கிராமத்தில், அந்த மாவட்டத்தின் விவசாயத் தொழில்நுட்பங்கள் அனைத்தையும் பூரணமாகப் பயன்படுத்தி புதிய விவசாயத் தொழில் நுட்பங்களைக் கையாளுதல், வர்த்தக மயப்படுத்தப்பட்ட நவீனவிவசாய முறைகள், கால்நடை உற்பத்தியுடன் ஒன்றிணைந்தமேட்டு நிலப் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்குப் பூரண முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளது.

இம் மாதிரி விவசாயக் கிராமங்களை அமைப்பதற்கு திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் விரைவில் இடங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(ச–111)

### தொழில் நுட்ப உதவியாளர் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

நீர்ப்பாசனத் திணைக்கள, தொழில்நுட்ப உதவியாளர் பயிலுநர் பரீட்சை இம் மாதம் 20 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்னமும் கொழும்பிலிருந்து வந்து சேரவில்லை என சம்பந்தப்பட்ட திணைக்களவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ச-12)

### நீர் விநியோகம்

(மந்திகை)

பருத்தித்துறைநகரசபைக்கு உட்பட்ட குடி நீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களில் நீர்விநியோகம் செய்வதற்கானநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச்சேவையை வழங்குவதற்கென, உள்ளூராட்சி ஆணையாளரிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 12 இலட்சத்து 8 ஆயிரம் மூலம் ஏற்கனவே நீர் கொள்கலன்கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

(உ-23)

### ப.நோ.கூ, சங்க கிளை

(கல்வயல்)

தென்மராட்சி மேற்கு கைதடி பல நோக்குகூட்டுறவுச் சங்கம், மக்களின் நன்மை கருதி ஆவரங்கால் பகுதியில் சங்க கிளை ஒன்றினை திறந்துள்ளது.

கைதடி, நாவற்குழி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த பொதுமக்கள் பலர் ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, கோப்பாய்ப்பகுதிகளில் தங்கியிருப்பதால் மேற்படிமக்கள் நிவாரணப் பொருட்கள் மற்றும் தேவைகளை இலகுவாக நிறைவு செய்யும் வகையில் இக்கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(உ-111)

## இருளில் மூழ்கும் அராலி விஷமிகளின் செயலாம்

(அராலி)

அராலி வடக்கு செட்டியார் மடம் சந்திக்கு அருகாமையில் கடந்த புதன்கிழமை இரவு விஷமிகள் சிலரால் மின்சாரக் கம்பிகளுக்கு செயின் எறியப்பட்டது.

இதனையடுத்து அயலவர் சிலரின் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் மின்சார உபகரணங்கள்பலஉம் பலத்த சேதத்திற்கு உள்ளானதுடன் அப் பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது.

அராலி வடக்குப் பகுதிகளுக்கு கடந்த ஓர் சில மாதத்திற்கு முன்னரே புதிய மின்சாரக்கம்பிகள் பொருத்தி புதிதாக மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன குறிப்பிடத்தக்கது.

எனவே, விஷமிகளின் செயற்பாட்டால் பொதுமக்கள் பலரும் பாதிப்படைந்ததுடன் மின்சார சாதனங்களும்பழுதடைந்தன. இதனால் அப் பிரதேச மக்கள் பலரும் கடும் விசனத்துக்கு உள்ளாகின்றனர். (க-24)

## தமிழாராய்ச்சிமாநாட்டின் 27வது வருட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 1974 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது, படுகொலை செய்யப்பட்ட ஒன்பது அப்பாவித் தமிழர்களின் 27 வது நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக உள்ள முற்றவெளிப் பகுதி நேற்று துப்பரவு செய்யப்பட்டது. (க)

இன்று செவ்வாய்க்கிழமை பிரசுரமாக வேண்டிய 'மருத்துவ விளக்கம்' பகுதி நாளை பிரசுரமாகும் என்பதனை வாசகப் பெருமக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

(ஆ-ர்)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம 04 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 170321 ஏ | 170321 பி |
| 170322 ஏ | 172718 ஏ |
| 172718 பி | 172718 சி |
| 176691 ஏ | 176726 ஏ |
| 176726 பி | 176788 ஏ |
| 176788 பி | 176829 ஏ |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 173576 ஏ | 173576 பி |
| 173782 ஏ | |
| 173782 பி | 173782 சி |
| 173852 ஏ | 173912 ஏ |
| 173912 பி | 173912 சி |
| 175218 ஏ | 175460 ஏ |
| 175492 ஏ | 175522 ஏ |
| 175531 ஏ | 175531 பி |
| 175558 ஏ | 175635 ஏ |
| 175654 ஏ | 175659 ஏ |
| 175660 ஏ | 195686 ஏ |
| 175691 ஏ | 178036 ஏ |
| 178078 ஏ | 178123 ஏ |
| 178170 ஏ | 178170 பி |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 173066 ஏ | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 177008 ஏ | 187902 ஏ |
| 187902 பி | |

**உடுவில்**

| | |
|---|---|
| 170339 ஏ | |

**பருத்தித்துறை**

| | |
|---|---|
| 151095 ஏ | 158075 ஏ |
| 158402 ஏ | 158402 பி |
| 158420 ஏ | 162213 ஏ |
| 162221 ஏ | 162221 பி |
| 164986 ஏ | 169506 ஏ |
| 169587 ஏ | 169899 ஏ |
| 172580 ஏ | 172580 பி |
| 172581 ஏ | 172583 ஏ |
| 162583 பி | 172583 சி |
| 172583 டி | 174273 ஏ |
| 174273 பி | 174365 ஏ |
| 174369 ஏ | 174374 ஏ |
| 174413 ஏ | 174413 பி |
| 174528 ஏ | 174528 பி |
| 174571 ஏ | 174571 பி |
| 174602 ஏ | |
| 174641 ஏ | 174641 பி |
| 174641 சி | 174641 டி |
| 174641 ஈ | 174642 ஏ |
| 174642 பி | 174701 ஏ |
| 174703 ஏ | 174703 பி |
| 176171 ஏ | 176186 ஏ |
| 176205 ஏ | 176205 பி |
| 176328 ஏ | 176409 ஏ |
| 176455 ஏ | 176455 பி |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 173609 ஏ | 173609 பி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 166269 ஏ | 171835 ஏ |
| 171835 பி | 172028 ஏ |
| 172028 பி | 173734 ஏ |
| 173734 பி | 173734 சி |
| 173743 ஏ | 175393 ஏ |
| 175393 பி | 175650 ஏ |
| 175651 ஏ | 175651 பி |
| 175707 ஏ | 175707 பி |
| 175713 ஏ | 175713 பி |
| 175713 சி | 175713 டி |
| 175713 ஈ | 175713 எவ் |
| 178041 ஏ | 178041 பி |
| 178041 சி | 178071 ஏ |
| 178071 பி | 142052 ஏ |
| 142052 பி | 166466 ஏ |
| 166466 பி | 174958 ஏ |
| 175754 ஏ | 175754 பி |
| 176606 ஏ | 176606 பி |
| 176606 சி | |
| 176720 ஏ | 176720 பி |
| | 176725 ஏ |
| 176766 ஏ | 176855 ஏ |
| 176857 ஏ | 176857 பி |
| 176866 ஏ | |

**கரவெட்டி**

| | |
|---|---|
| 145814 ஏ | 145814 பி |
| 164469 ஏ | 164624 ஏ |
| 164636 ஏ | 164637 ஏ |
| 165416 ஏ | 167144 ஏ |
| 167187 ஏ | 167187 பி |
| 167187 சி | 167315 ஏ |
| 167979 ஏ | 167979 பி |
| 167979 சி | 167979 டி |
| 172179 ஏ | 172191 ஏ |
| 179211 ஏ | 172214 ஏ |
| 172605 ஏ | 172605 பி |
| 174286 ஏ | 174327 ஏ |
| 174327 பி | 174327 சி |
| 174327 டி | 174477 ஏ |
| 174558 ஏ | 174625 ஏ |
| 174661 ஏ | 174661 பி |
| 176030 ஏ | 176031 ஏ |
| 176124 ஏ | 176124 பி |
| 176240 ஏ | 176447 ஏ |
| 176447 பி | |

## இடம் மாற்றம்

[கரணவாய்]

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த வலயம் 2 இற்கான சமுர்த்தி அலுவலகம், நெல்லியடி நாவலர் மடம் திருமகள் சோதி வீதிக்கு அருகாமையில் இடம்மாற்றப்பட்டுள்ளது. (உ-27)

# செய்தித் துளிகள்

## 'நிஜத்தின் நிழல்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிதம்பரபத்தினியின் 'நிஜத்தின் நிழல்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும். (உ)

## ஊறணி ஊற்று திருத்தம்

(புலோலி)

வல்வெட்டித்துறை ஊறணி ஊற்று சுமார் 2½ இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை குச்சம் ஒழுங்கை வடிகால் அமைப்பும் சுமார் 1 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான நிதி வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எஸ். சிவாஜிலிங்கத்தின் நடவடிக்கைகளையடுத்தே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## பாற்பண்ணை வீதி திருத்தம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி, பாற்பண்ணை வீதி திருத்தஞ் செய்யப்படுகிறது.

கடந்த பல காலங்களாகச் சீரற்றிருந்த இவ் வீதியால் பல சிரமங்களின் மத்தியில் பயணம் செய்த மக்கள் இனி சௌகரியமாகத் தமது போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும். [ச-22]

## ஆத்திசூடி முற்றோதல் விழா

(யாழ்ப்பாணம்)

அறம் உரைத்த ஒளவையின் 'ஆத்திசூடி முற்றோதல் விழா', இம்மாதம் 14, 15, 16, 17, 18 ஆம் திகதிகளில் புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதியில் இடம்பெறவுள்ளது.

பெருங்காடு தெற்கு அபிவிருத்திச் சங்க கல்வி, கலை கலாசாரப் பிரிவும், வட இலங்கை சர்வோதய புங்குடுதீவு கிளையும் இணைந்து நடத்தும் இவ்விழாவில்,

பெற்றோர், பெரியோர், அவதாரர், தேசபக்தர், வேதங்கள், அறங்கள், காப்பியங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், கீதங்கள், சதகங்கள் பெயரில் நினைவுப் பேருரைகளும் ஆத்திசூடி முற்றோதல் பரிசளிப்பும் இடம்பெறும். (உ)

## விபத்துகளில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளியன்று இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் படுகாயமுற்ற இருவர் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கன்னாதிட்டிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமுற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முருகதாஸ் பிறேம்சுந்தர் (வயது 23).

நீர்வேலிப் பகுதியில் இராணுவ வாகனத்தை விலத்த முற்படுகையில் மண்கும்பி மீது வீழ்ந்து படுகாயமுற்ற சாவகச்சேரியைச்சேர்ந்தஇரத்தினம் சிவபாலன் (வயது 34) ஆகியோரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-12)

## மயான வீதி திருத்தம்

(கல்வயல்)

புலோலிதெற்குப் பகுதியில் அமைந்துள்ள துறையாமூலை இந்து மயானத்துக்குச் செல்லும் வீதி, புலோலி பிரதேச சபையினரால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இறுதி ஊர்வலம் இடம்பெறுவதில் இது வரை காலமும் இருந்து வந்த சிக்கல் நிலை தீர்க்கப்பட்டுள்ளது. (உ-111)

## ஆளுமை

(திருநெல்வேலி)

யாழ். பல்கலைக்கழகஉடற்கல்விப் பிரிவு மாணவர்களினால் அண்மையில் 'ஆளுமை' என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது.

பல்வேறு விளையாட்டு அம்சங்களை தாங்கி வந்துள்ள இச் சஞ்சிகையில், பிரபல்ய விளையாட்டுத்துறை வல்லுநர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-22)

## ஆண்டு நிறைவுவிழா

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகமருத்துவ மாணவர் ஒன்றியத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு விழாவும் 'நாடி' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணமும் கலந்து கொள்வர்.

மேற்படி நிகழ்வில் கவியரங்கம், நாடகம், பட்டிமன்றம் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-உ-37)

## புராண படனம்

(கந்தர்மடம்)

யாழ். சந்தர்மடம் பழம் வீதியிலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு, திருவாதவூரடிகள்புராணபடனம் இடம் பெற்று வருகிறது. இப் புராணபடனமானது அதிகாலைப் பூசை முடிந்ததும் நடைபெறுகிறது. (உ-37)

## குளத்தில் இருந்து சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள குளம் ஒன்றில் இருந்து, வெட்டிக் கொலை செய்யப்பட்டுபொதி செய்யப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி வெட்டிக்கொலை செய்யப்பட்டவர் மனோ என அழைக்கப்படும் பாலா என்ற தமிழ் இயக்கம் ஒன்றின் பிரதிநிதி என தெரியவந்துள்ளது. (உ-4)

## திருவாசக முற்றோதல்

(நல்லூர்)

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை, காலையில் குருபீடாதிபதி, ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் தலைமையில் 'திருவாசக முற்றோதல்' இடம்பெறவுள்ளது. (உ-103)

# மொனரா விமான சேவையில் பயணிப்பதற்கு பணம் கட்டியோரின் கட்டணம் மீளளிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

கடந்த 1998 ஆம் ஆண்டு மொனரா விமான சேவையில் பயணம் செய்ய பயணச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டும்,விமான சேவை இடைநிறுத்தப்பட்டமையினால் பயணம் செய்யமுடியாமற் போனவர்களது பயணச்சீட்டுக்குரிய பணத்தினை மீளப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில், ஈ.பி.டி.பியின் யாழ்.தலைமை செயலகத்தில் கோப்பாய் பிரதேச அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

அவ்வேளை, மொனரா விமான சேவையினால் வழங்கப்பட்ட விமானச் சீட்டுக்கள் விடயமாக பணத்தை மீளப்பெற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா அங்கு கூடியிருந்த மக்கள் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம்,உபதலைவர் ரவி மற்றும் கோப்பாய்,அச்சுவேலி,புத்தூர் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் 2001ஆம் ஆண்டில் கோப்பாய் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதேசமயம், மேற்படி மொனராவிமான சேவையில் பயணம் செய்யாத பயணச்சீட்டுக்களுக்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் தங்களது பெயர் விபரங்களை பயணச்சீட்டுக்களுடன் ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைச் செயலகத்தில் பதிந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (உ)

# பா. உ. அனைவரையும் இனத்தின் நன்மை கருதி ஒன்றுபடுமாறு மகேஸ்வரன் எம்.பி. அழைப்பு.

(யாழ்ப்பாணம்)

பகை உணர்வுகளை மறந்து எமது இனத்தின் நன்மை கருதி யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், பாராளுமன்றத்தில் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போது மேற்கண்ட கோரிக்கையை விடுத்த எம்.பி மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது இனத்தின் விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பெரும்பகை இருக்கிறது

விட்டுக் கொடுப்புகள் மூலம் பகை உணர்வை நீக்குதலே மக்களின் அபிலாஷைகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒரே வழி என்றார். (உ-12)

## கல்வி வசதி

[மந்திகை]

கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்புக்குள் வசித்து வரும் அடிப்படை கல்வி வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் உறவுகளைப் பிரிந்தவர்கள், பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தியவர்கள் ஆகியோர்இனம் காணப்பட்டு அவர்களுடைய வாழ்க்கையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையிலான கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. (உ-23)

## திருவீதி பஜனை

(நல்லூர்)

வண்ணை - ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயப் பஜனைக்குழுவினர், திருவெம்பாவையையொட்டித் தினமும் அதிகாலையில் திருவீதி பஜனையை நடத்திவருகின்றனர். (உ-103)

## நிவாரணம் வழங்கப்படுமா?

(வவுனியா)

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கு கடந்தடிசெம்பர் மாத நிவாரணங்கள் எதுவும் இன்னமும் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நிவாரணங்கள் வேப்பங்குளம், நெளுக்குளம், பூந்தோட்டம், சிதம்பரபுரம், கிராச்சூடு, அடம்பன்குளம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கே வழங்கப்படவில்லையென வவுனியா திட்டமிடல் பணிமனையை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (ந-4)

# வாழ்விடங்களை பாழ்படுத்திவரும் வானர சேனைகள்

(ஈச்சமோட்டை)

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும், வானர சேனைகளின் அட்டகாசங்கள் பெருகிவருவதாக பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதிக் காடுகளில் நிலை கொண்டிருந்த இவை, இடப்பெயர்வாக தாமும் பாதுகாப்பான இடங்களை நாடி குடிமனைகளுக்குள் புகுந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களின் வீட்டுக் கூரைகளில் ஏறி அவற்றுக்குச் சேதத்தினை உண்டு பண்ணும் வகையில் துள்ளிக் குதித்து கூத்தாடியும், அவர்களின் பாவனைப் பொருட்களை எடுத்துப்போய் வேறிடங்களில் போட்டும், பயிர்களை நாசம் செய்வதுமான ''குரங்குச் சேட்டைகளில்'' ஈடுபட்டு மக்களுக்குப் பெருந் துன்பம் விளைவித்து வருகின்றன.

இதேசமயம்,

இவ்வாறு இருப்பிடங்களை விட்டு குரங்குகள் அலைவதால், இவை வேகமாக அழிந்து போகக்கூடிய ஏது நிலை தோன்றியிருப்பதாகவும், பொது மக்கள் இது விடயத்தினைக்கருத்திற்கொண்டுஉயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் விரட்டுமாறும் சூழலியலாளர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. (உ-59)

# மகேஸ்வரன் எம்.பி ஜனாதிபதிக்கு மகஜர்

[வடபராட்சி கிழக்கு]

விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்ட ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நிராகரித்தமையை கண்டித்துஐக்கியதேசியக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி. மகேஸ்வரன் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அவசர மகஜர்களை அனுப்பி வைத்துள்ளார்.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யுத்த முனைப்பில் ஆர்வம் காட்டி வரும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் மக்களிற்கு வழங்கப் போகும் தீர்வு தான் என்ன?

தொடரும் யுத்தத்தால் தமிழரின் பெறுமதியான சொத்துக்கள் நாசமடைந்ததைத் தவிர வேறு எதனையும் அரசாங்கத்தால் சாதிக்க முடியவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை அடியோடு நாசம் செய்யும் இப்படியான யுத்தம் தேவையா?

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது, [க]

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சரவெட்டி கிழக்கு பத்திரகாளி அம்பாள்தேவஸ்தானத்தில் திருவாதிரை தினமான இன்றுதிருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது. [உ]

## அன்பளிப்பு

[கல்வயல்]

பருத்தித்துறை நகராட்சி மன்றத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டப் பிரிவினரால்மலசல கூடக்கழிவுஅகற்றும் பவுசரும் இயந்திரமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. [உ-111]

## இன்று ஒரு தகவல்

# கண்மீது கவனம்வேண்டும்

நமது உடலில் கண் முக்கியமான ஒரு உறுப்பு உங்கள் கண் நன்றாயிருக்க வேண்டுமென்றால் கண்ணிலே எதையும்போடாதீர்கள். கண்ணை அழகு படுத்துகிறேன் என்று சொல்லி எதுவும்செய்யவேண்டாம். ஒரே குப்பியிலிருக்கிற மையை பலர் பயன் படுத்துகிற பொழுது, மிகவும் நுட்பமான சில கண்ணோய்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் போய் விடுகிறது. புருவம் கண்ணுக்குப் பாதுகாப்பானது. அதை நீக்கி விட்டுக் கண்ணுக்கு மை தீட்டுவது இப்போது ஒரு நாகரிகம்.

பாலாபிஷேகம், எண்ணெய் அபிஷேகம், பூச்சாறு அபிஷேகம், பன்னீர் அபிஷேகம்போன்றவையெல்லாம் உங்கள் கண்ணுக்கு வேண்டாம் கண் பார்க்கிறதற்குத் தான் இருக்கிறது அதற்காக அதைப் பாடாய்ப்படுத்தாதீர்கள். அளவாக உபயோகப்படுத்துங்கள்.

சின்ன எழுத்தைப் படிக்கிறது, ஓடுகிற வண்டியில் படிப்பது, வெளிச்சம் குறைவாக உள்ள இடத்தில் படிப்பது போன்றவை எல்லாம் கண்ணுக்குக் களைப்பையுண்டாக்கும். இரவில் கண் ... டுக் கண் விழித்து படிக்கிறது. தூக்கம் வராமலிருப்பதற்காகஅவ்வப்போது கண்ணைக் கழுவி விட்டுப் படிக்கிறது, காப்பி குடித்துத் தூக்கத்தை விரட்டுவது போன்றன வெல்லாம்செய்து, கண்ணைவேலை வாங்குவது மிகவும் கொடுமையானது. கண்ணுச்குச்சோர்வு வந்தால். உடனே ஐந்து அல்லது பத்து நிமிடம் இரண்டு கண்ணையும் மூடிக்கொண்டு உட்கார்ந்துவிடுங்கள், அல்லது படுத்து விடுங்கள்

இப்படி ஒய்வு கொடுத்தால், கண் மறுபடியும் உற்சாகமாக உழைப்பதற்குத் தயாராகி விடும். பார்வைக் குறைவிருந்தால் உடனே டாக்டரிடம் போய் பரிகாரம் தேடுகிறது தான் நல்லது. திடீர் என்று ஏற்படுகிற பார்வைக் குறைவைக்கண்டுபிடிக்க சுலபமான ஒரு வழி இருக்கிறது. படுக்கைக்கு எதிரிலே சுவரிலே ஒரு படத்தை மாட்டிவையுங்கள், தினமும் காலையிலே கண் விழித்ததும் அதனைப் பாருங்கள. ஒரு கண்ணை மூடிக் கொண்டு இன்னொரு கண்ணால் பாருங்கள். இப்படி மாற்றி மாற்றிப் பாருங்கள், இரண்டு கண்ணுக்கும் பார்வையிலே வித்தியாசம், வேறுபாடு தெரிந்தால் கண் மருத்துவரிடம் போகலாம். ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்தால் பல விதமான நோய்களைச் சுலபமாகக் கட்டுப் படுத்தி விடலாம்.

பழங்காலத்தில் கண்ணில் நோய்க்கிருமிகள் தாக்கி ஒளியிழந்து- பார்வையிழந்தவர்கள் மிகவும்அதிகம். அப்போது வைத்திய வசதியும்குறைவு அதனால் தான் ஆலய வழிபாட்டிலேயும் ஒரு பழக்கம்வந்தது. கோயிலிலேகற்பூரம் கொளுத்துகிறார்களே, அந்தப் புகையை கண்ணிலே எடுத்து ஒத்திக் கொண்டால் நோய்க் கிருமிகள் கண்களை தாக்குகிறதில்லையாம். உடம்புக்குச் சுறுசுறுப்பு உண்டாகிறதாம். ஒரு பெரிய கண் டாக்டரே இதைச் சொல்கிறார்.

சுருக்கமாக உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். உங்கள் கண்ணில் ஒரு உறுத்தல் இருந்தால், உங்களை விட விஷயம் தெரிந்தவர்களிடம் யோசனை கேட்க வேண்டும். இல்லை என்றால் அவர் சோழிக்கால் இரத்தத்தைத் தான் விடச் சொல்வார்! நம்மை விட விஷயம் தெரிந்தவர்களிடம் ஏன் யோசனை கேட்கவேண்டும்என்று சொல்கிறேன் என்றால்- - - -

ஒருவர் ஒரு பஸ் ஸ்ராண்டிலே நின்று கொண்டிருந்தார். கிராமத்துஆசாமி அவர் பக்கத்திலே நின்ற படித்த ஆசாமியிடம் 'அந்த பஸ் எந்த ஊருக்குப் போகிற தென்று கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள் என்றார். அதற்கு அவர் பஸ் எங்கேயப்பா வருகிறது என்றார். அவர்பார்வை வேறு எங்கேயோ?

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

எதிர்கால

## தென்னை வளத்திற்கு வட்டெலிகளால் சவால்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்து வரும் 'வட்டெலிகளின்' பெருக்கத்தினால் எதிர்கால தென்னை வளத்திற்கு பெரும் சவால் எழுந்துள்ளது.

இவ்வட்டெலிகள் தென்னையின் வட்டுப்பகுதியிலிருந்து இளம் தேங்காய்களை (குரும்பைகளை) அரிப்பதனால் அவற்றின் மூழ்ப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுஅவை வாடி விழுகின்றன.

இவ்வாறு இளம் நிலையிலேயே அதிகளவான தேங்காய்கள் உதிர்ந்து போவதால் எதிர்காலத்தில் எதிர்பார்க்கும் தென்னை வளத்தை பெறமுடியாது போகும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. (உ-59)

## உயர் ஆங்கிலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் முதன் முதலாக 'உயர் ஆங்கிலம்' எனும் புதிய கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பாடநெறியைப் பயில விரும்புவோர் தொடக்க தினமான 13 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், இம்மாதம் 13 ஆம் திகதி தொடர்பியலுக்கான ஆங்கிலம், அலுவலக முகாமைத்துவம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ-12)

## ச.ச. நிலையம் இயங்குகிறது

[கரணவாய்]

கரவெட்டி பிரதேச சபைக் குட்பட்ட மூத்த விநாயகர் சனசமூக நிலையம் நீண்ட காலத்திற்கு பின் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

பாதுகாப்பு படையினரின் பாவனையில் இருந்த காரணத்தினால் மேற்படி சன சமூக நிலையம் இயங்காதிருந்தமையும்,

சம்பந்தப்பட்டபகுதி இளைஞர்கள் மற்றும் கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் முயற்சியின் பேரில் சனசமூக நிலையம் மீளவும் இயங்க அனுமதிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-27)

# புலிகளின் அழைப்பை ஏற்று அரசு சமாதானப்பேச்சுக்கு முன்வரும்

## ஹாவாய் சைவ ஆதீனபீடாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்று அரசும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்வரும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஹாவாய்த் தீவின் சைவ ஆதீன பீடாதிபதியான சற்குரு ஸ்ரீ சிவாய சுப்பிரமணிய சுவாமிகள்தெரிவித்துள்ளார்.

கனடாவில் ஸ்ரீ நாகபூஷனி நாகலிங்கேஸ்வர சுவாமி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு ஆசி வழங்கும்போது மேற்கண்டவாறு அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள சமாதான யுத்த நிறுத்தம் வரவேற்கத்தக்கது என தெரிவித்துள்ள அவர்,

நோர்வே இராஜதந்திரி எரிக்சோல்ஹெய்மை தான் சந்தித்து பேசியபோது கிடைத்த தகவல்கள் இலங்கை இனப் பிரச்சினையில் ஒரு திருப்புமுனை ஏற்படும் என்ற நம்பிக்கையை தமக்கு ஏற்படுத்தியிருப்பதாகவும்சுவாமிகள் அவ்வைபவத்தில் மேலும் கூறினார். (உ)

## மயானத்தில் பற்றைகள்

[இணுவில்]

கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடிஇந்து மயானத்தில் பற்றைகள் மற்றும் முட்செடிகள்வளர்ந்து காணப்படுகிறது.

இதனால், இறுதிக் கிரியைகளை நடத்தச் செல்லும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். [உ-49]

## சைக்கிள் திருட்டு

(மந்திகை)

மந்திகைமருத்துவமனைக்கு அருகிலுள்ள கடை ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த பெண்கள் துவிச்சக்கர வண்டி ஒன்று பட்டப் பகலில்திருடப்பட்டுள்ளது.

மந்திகை மருத்துவமனையில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர் ஒருவரது துவிச்சக்கர வண்டியே திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச-23]

## பசுவைத் திருடிய நபர் நீதி மன்றில்

(சாவகச்சேரி)

வல்வெட்டியில், பகல் வேளையில் மேய்ந்து கொண்டிருந்த பசுவைத்திருடிய நபர் கடந்த 3 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

குணசிங்கம் சிவநாதன் (வயது 26) என்ற மேற்படி நபர், தனது குற்றத்தினை ஒப்புக் கொண்டதன் பேரில், பசு உரிமையாளருக்கு 6 ஆயிரம் ரூபாவும், காசுப்பிணையாக இரண்டாயிரத்து 500 ரூபாவும் சரீரப் பிணையுமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன் பொலிஸாரின் அழைப்பை அவமதித்த குற்றம் தொடர்பான விசாரணைக்காக வழக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (உ-21)

## பெண் மன நோயாளி அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்திய சாலையினுள் திடீரெனப் புகுந்த பெண் மனநோயாளி ஒருவர் அங்கு நின்றவர்களைப் பலமாகத் தாக்கியதுடன், கண்ணாடிகளையும் கைகளால் அடித்து நொருக்கியதாக தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது அங்கு நின்ற பலரையும் வாய்க்கு வந்த படி திட்டித்தீர்த்ததோடல்லாமல், ஆண்கள் பலரையும் அடிக்க முயன்றதாகவும், தொலைத்தொடர்பகப்பகுதியில்இருந்த கண்ணாடிகளை உடைத்ததாகவும், பின்உறவினர்களால் தெல்லிப்பழை உளவியல் வைத்திய பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது. (உ-12)

## குப்பி விளக்கு சரிந்ததில் சிறுவன் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்து தீப்பற்றியதில், அதனுள் அகப்பட்ட 6வயதுச் சிறுவன் பலத்த எரிகாயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான்.

புத்தூர் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில், தவராசா நிரூஷன் என்ற சிறுவனே எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரியவந்துள்ளது (உ-12)

## மக்கள் குடியேறும் வாய்ப்பு இருபாலை கிழக்கில் இல்லை

### பொதுமக்கள் விசனம்

(ஆவரங்கால்)

இருபாலை கிழக்கில் பொது மக்கள் வசிப்பதற்கேற்ற ஏது நிலை ஏதும் நிலவவில்லை என சம்பந்தப்பட்ட பொது மக்களால் பெரிதும் மனக் குறைவெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக இடம் பெயர்ந்திருந்த மேற்படி பகுதி மக்களை இம் மாதம் 4 ஆம் திகதியில் இருந்து மீளக்குடியமர படையினர் அனுமதித்திருந்தனர்.

இவ் அனுமதியைத் தொடர்ந்து மிகவும் ஆர்வத்துடன் அங்கு சென்ற மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்துள்ளது.

குடியிருப்புக்கள் இடிந்தும் உடைந்தும் கூரைகள், கதவுகள் என்பன கழற்றப்பட்டும் வசிப்பதற்கு உகந்த நிலையில் காணப்படாததுடன்,

அங்குள்ள பாடசாலைகள் தளபாடங்கள் உபகரணங்கள் ஏதுமின்றி வெறுந் தோற்றமாக காட்சியளிப்பதால், மாணவர்கள் வேறிடங்கள் சென்று கல்வி கற்க வேண்டிய நிலையும் எழுந்துள்ளது.

அத்துடன், பயன்தரு மரங்கள் பல அழிக்கப்பட்டு அப் பகுதி வனாந்தரமாக காட்சியளிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம், தமது நிலையைக் கருத்திற்கொண்டு மீளவும் பழைய இடத்தில் ஏற்ற வசதிகளுடன் வாழ பொது அமைப்புக்கள் உதவமுன் வர வேண்டும் எனபாதிக்கப் பட்ட பொதுமக்கள் சார்பில் மிகுந்த ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது. (உ-57)

## அங்கத்தவர் பதிவு

(நல்லூர்)

கந்தர்மடம் ஜே/102கிராம சேவை அலுவலர் பிரிவில், 2001-ஆம் ஆண்டுக்கான குடும்ப அங்கத்தவர் பதிவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (உ-103)

## திருவாதிரை உற்சவமும் பாராட்டும்

(கோப்பாய்)

சிறுப்பிட்டி வடக்கு ஞான வைரவர் கோயிலில் திருவாதிரை உற்சவமும், பிரம்மஸ்ரீ க. ஜெயராமக் குருக்களின் சேவைகளைப் பாராட்டி எடுக்கப்படும் கௌரவிப்பு மற்றும் உபசார விழாவும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் 11 மணிவரை திருவாதிரை உற்சவமும், பி.ப. 1 மணியில் இருந்து குருக்களின் பராட்டிக் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறும்.

பாராட்டி கௌரவிப்பு நிகழ்வின், தலைமையுரையை முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களும் வரவேற்புரையை பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மாவும் (கோப்பாய்-சிவம்) நிகழ்த்துவர்.

ஆசியுரைகளை, சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.

தொடர்ந்து பட்டமளிப்பு வைபவம், பாராட்டுரைகள், கௌரவிப்பும் பதக்கம் வழங்கல் ஆகியன இடம்பெறும். (உ-79)

## வருடாந்த பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

உரும்பிராய் வளளுவர் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா, நேற்றுமுன்தினம் பி.ப ஒரு மணியளவில் ம. கேதீஸ்வரி தலைமையில் நடைபெற்றது. [உ]

## நுளம்பு ஒழிப்பு

[வட்டுக்கோட்டை]

அராலிப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு விழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அப்பகுதி குளங்களில் நுளம்பு இனத்தைக் கட்டுப்படுத்தும் வகையில். நுளம்பின் குடம்பிகளை உண்ணும் மீன் இனங்கள் குளத்தில்விடப்பட்டுள்ளன.

அத்துடன், இப்பகுதி சுகாதார பரிசோதகரினால் சனசமூக நிலையங்கள் தோறும் கருத்தரங்குகளும் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (உ-24)

# அமெரிக்க ஜனாதிபதியாக
# ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவு
## உத்தியோக பூர்வ அறிவிப்பு

(வாஷிங்டன்)
அமெரிக்க நாடாளுமன்ற கலப்புக் கூட்டம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை முறைப்படி அறிவித்துள்ளது.

அந்தத் தேர்தல் முடிவின்படி அமெரிக்க ஜனாதிபதியாக ஜோர்ஜ்டபிள்யு புஷ்சும் உப ஜனாதிபதியாகடிக்சலும 271வாக்குகள் வெற்றிபெற்றுறுள்ளார் என்றும் எதிர்த்துப் போட்டியிட்ட அல்கூருக்கு அவருடன்இணைந்தவருக்கும் 266 வாக்குகள் கிடைத்தது என்றும் தெரிவித்துள்ளது.

இதனுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் செய்திகள் முடிவுற்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதியின் பதவியேற்புஇம் மாதம் இருபதாம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது (து)

### இந்தோனேஷியா பற்றிய
# தப்பபிப்பிராயத்தை போக்க வெளிநாட்டில் முயலவேண்டும்
## துணை அதிபர் வேண்டுகோள்

(கோலாலம்பூர்)
வெளிநாடுகளில் வாழும் இந்தோனேஷியர்கள் தங்கள் தாய் நாட்டைப்பற்றிநிலவும் தப்பானகருத்துகளை நீக்கப் பிரசாரத்தில் ஈடுபட வேண்டும் என்று இந்தோனேஷிய துணை அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

மலேசியா சென்றுள்ள இந்தோனேஷிய துணை அதிபர் மேகவதிசுகர்னோ புத்திரி, மக்கள் மத்தியில் உரையாற்றுகையில்; ஒரு சிலர் செய்த தவறுகளுக்காக நாட்டுக்குஅவப்பெயர்ஏற்பட்டிருக்கிறது என்றும் முந்திய அதிபர் சுகார்ட்டோ ஆட்சியில் ஏற்பட்ட தவறுகளே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

இன ஒற்றுமையையும் மத ஒற்றுமையும் புதிய அரசு பேணிவருகிறதென்றும் மேகவதி தெரிவித்தார்.

இதேவேளை இந்தோனேஷிய ''அச்சே'' தீவிரவாத விடுதலை இயக்கமும் அரசு அதிகாரிகளும் சுவிஸ்சிலாந்தில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடாகியிருக்கின்றது என்றும்தெரிவிக்கப்படுகிறது (து)

# இஸ்ரேலிய அரசியல்வாதி இந்தியாவிற்கு விஜயம்

[புதுடில்லி]
கடந்த ஐந்து மாதங்களில் இரண்டாவது முறையாகஇஸ்ரேலிய மூத்த அரசியல் தலைவர் சிமோன்பெரஸ் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவர் இந்தியாவின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்த இருப்பதாகவும் மேற்காசிய சமாதான நிலை பற்றியே பேசுவாரென்றும் குறிப்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் பேச்சு நடத்த உள்ளார் என்றும் தெரிய வருகிறது.

இவருடைய இந்திய வருகையால் நீடித்து வரும் இஸ்ரேலிய பலஸ்தீன முரண்பாடுகள் நீங்க வழிகிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது (து)

# பஞ்சாப்பில் வீதி விபத்து பெருமளவினர் பலி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலத்தில் ஏற்பட்டசாலை விபத்தில்குழந்தைகள் உட்பட பதினைந்து பேர் பலியாகியுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் கமாலியா நகருக்கு பயணிகளை ஏற்றி வந்த பேருந்து ஒன்று எதிரே அதி வேகமாக வந்து கொண்டிருந்த வானுடன் மோதியதில் பதினொரு பேர் ஸ்தலத்திலே பலியாகினர் பருத்துவமனைக்கு படுகாயம் அடைந்தவர்களை எடுத்துச் செல்லும் பொழுது நான்கு பேர் மரணமானார்கள். (து)

# கானாவின்புதிய அதிபராக ஜோன் கூப்பர் பதவி ஏற்பு

(இலண்டன்)
கானாவின் புதியஅதிபராக ஜோன் கூப்பர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இரண்டாண்டுகள் ஆட்சியிலிருந்த ஜெரிஜவுலினிற்குப் பின்இவர்பதவியை ஏற்றுக் கொண்டார்.

கடந்த மாதம் நடந்த அதிபருக்கான தேர்தலில் இன்னொருவருடன்போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த இவர் நேற்று முன்தினம் பதவியை ஏற்றுக் கொண்டார்.

இதேவேளை புதிய அதிபருக்கு விசுவாசமாக மக்களை இருக்குமபடி முன்னைய இராணுவ ஆட்சியாளர் ஜவுனின் கேட்டுக் கொண்டார். (து)

### கேரள- தமிழகத்தில்
# தொடர் நில நடுக்கம் இருவர் பலியாகினர்

(சென்னை)
கேரளதமிழகமாநிலங்களில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் இருவர் இறந்துள்ளனர். பலருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தால் தமிழ் நாட்டின் திருநெல்வேலி கடயம் என்ற ஊரில் வீடு இடிந்து விழுந்ததில் இரண்டு வயதுக் குழந்தை மரணமானது .பலருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை கேரளத்தில் ஒரு வயோதிபர் பயத்தால் மார்படைப்பு ஏற்பட்டு இறந்துள்ளார்.

தமிழ் நாட்டில் திருநெல்வேலி விருதுநகர், தேனி ஆகிய இடங்களிலும் கேரளாவில ஆலப்பூளை, வேலப்பூளை இடுக்கி இரணாகுளம் திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டதாகவும்தெரிவிக்கப்பட்டுளது.

கடந்த டிசெம்பரில் ஏற்பட்ட நிலநடுக்கத்திலும் பார்க்கக் குறைவாக 4.8 றிச்டர் அளவுகோலில் காட்டப்பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சபரிமலை ஐயப்ப உற்சவத்திற்கு சென்ற மக்களும் இதனை உணர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## இராசி பலன்

9-01-2001

(மார்கழி 25, செவ்வாய்)
பூரணை பி.இ 3 04 வரை
திருவாதிரை மாலை 5.18 வரை
ராகுகாலம் 3.32- 5.02
சுபநேரம் 11.02- 12.32
பூரணை விரதம்.

**மேடம்**
அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரியம் கைகூடும், தனவரவு.

**இடபம்**
வாக்குக் கலகம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம், சிறுவியாதி.

**மிதுனம்**
ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம்.

**கடகம்**
காரிய தாமதம், பிரயாணம், அரசநன்மை, தனவிரயம்.

**சிங்கம்**
நினைத்த காரியம், கைகூடும், தனலாடும், மனமகிழ்ச்சி, குடும்ப சுகம்,

**கன்னி**
தொழில் விருத்தி, பெரியோர் சந்திப்பு, அதிகாரம், ரோகம்.

**துலாம்**
மனப்பயம், காரியநன்மை, நிலைமாற்றம், பிரயாணம்,

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, பிரயாண பயம், சிறுவியாதி, முயற்சி தாமதம்.

**தனுசு**
உஷ்ண வியாதி, சுவாரஸ்யம், பிரயாணம், போசன சுகம்.

**மகரம்**
எதிரிகள் விலகுவார்கள், புதியமுயற்சி, சந்தோசமான நிகழ்வு, நோய் குணமடைதல்.

**கும்பம்**
குடும்பத்தில் அமைதிக் குறைவு, தாழ்வு நிலை, காரிய தாமதம், வியாதி.

**மீனம்**
புத்திதடுமாற்றம், தன்னம்பிக்கைக் குறைவு, முயற்சி ஜெயம், உடல் சோர்வு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

### கல்வி வலயங்களில் கடமையாற்றும்
# பதில் பணிப்பாளர்களுக்கு இன்று கூட்டம்

(சுண்டுக்குளி)
யாழ். மாவட்டத்திலுள்ள கல்வி வலயங்களில் பதில் கடமை புரியும் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.00மணியளவில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பதில் கடமை புரியும் கல்விப் பணிப்பாளர்களை கல்வி நிர்வாக சேவை உள்வாங்காதமையால் தமக்கென ஓர் அமைப்பை உருவாக்கி நிரந்தர நியமனம் பெறுவதற்கான முன் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

அதேவேளை மேற்குறித்த விடயம் தொடர்பாக ஏற்கனவே அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் ஆலோசிக்கப்பட்டு, ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ச-110)

# கப்பல் பயணிகளுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

(சுண்டுக்குளி)
கப்பல் மூலமான பயணத்திற்கான அனுமதியைப் பெறும் வகையில் கொட்டும் பனியிலும் கடும் குளிரிலும் காத்து நின்ற மக்கள் கூட்டத்தை மணியம் கட்டட மருகே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் சந்தித்து கலந்துரையடினார்.

கப்பல் பயணத்திற்கான அனுமதியை பெறுவதற்காக நீண்ட வரிசையில் தரித்து நின்ற மக்களை யாரும் எதிர்பாராத வகையில் திடீர்ச் சந்திப்பு நடத்திய அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடி பயண அனுமதி பெறுவதில் காணப்படும் சாதக பாதக பலன்களை நேரடியாகக் கண்டறிந்தார்.

இதேவேளை, மக்கள்எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளைவிரைவில் மேற்கொள்வதெனவும் அமைச்சர் பொது மக்களிடம் உறுதியளித்திருப்பதாய்தெரியவந்துள்ளது. (உ-110)

# மலிவான முறையில் கோழித்தீன் உற்பத்தி
## யாழ்ப்பாணத்தில் முயற்சி

(ஈச்சமோட்டை)
யாழ்ப்பாணத்தில், உள்ளூர் உற்பத்திகளைக் கொண்டு மலிவான முறையில் கோழித்தீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்ளூரில் விளையும் குரக்கன், சோளம் ஆகியவற்றைக் கொண்டு தரமான வகையில் இக் கோழித் தீவனங்கள் உற்பத்திசெய்யப்படுகின்றன.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படுவனவற்றில் குஞ்சுத் தீவனம், முட்டைத்தீவனம், இறைச்சிக்கோழித்தீவனம், இறைச்சிக் கோழி முடிவுத் தீவனம் ஆகிய வகைகள் உள்ளன

இவ் உற்பத்திகளை மேற்கொள்ள, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் உதவியுடன் ஒரு இலட்சம் ரூபா செலவில. இதற்கான இயந்திர சாதனம் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரைகாலமும் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தீவனங்களின் 50 கிலோ பக்கற்றுக்கு முந்நூறு ரூபாவை மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், தற்போதைய உள்ளூர் தீவனம் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றமையால், யாழ்.மாவட்டப் பயனாளிகள் பெரிதும் நன்மையடைய முடியும் என யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-59)

# விஞ்ஞான கண்காட்சி

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்ஏற்பாடுசெய்துள்ளவிஞ்ஞானக்கண்காட்சிஇம் மாதம 11, 12, 13 ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுளளது. [ச-ஆ]

# நூல்கள் அன்பளிப்பு

(கல்வயல்)
பருத்தித்துறை நகராட்சி மன்றம் அதன் கீழ் இயங்கும் பொதுஜன நூலகத்திற்கு ரூபா ஐம்பதினாயிரம் பெறுமதியான நூல்களை அண்மையில் கொள்வனவு செய்துள்ளது.

சிறுவர் கதை நூல்கள் பாடசாலை, மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு உகந்த நூல்கள், சனனி அறிவினை வளர்ப்பதற்குரிய நூல்கள் முதலியன இவற்றுள் அடங்கியுள்ளன.

இரண்டாவது தடவையாக மேற்படி நூலகத்துக்கு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

முன்னர் சுமார் ரூபா முப்பத்தையாயிரம் பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இம்முறை, புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் நூலகம் திறந்து வைக்கப்பட உள்ளமையால், பெருமளவு சிறுவர்க்குரிய நூல்களே கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ச-111]

## கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)
தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிகளுக்கான நேர்முகப் பரீட்சை நாளை 10 ஆம் திகதியும், மறுதினம் 11 ஆம் திகதியும் யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதியுடன் தொடர்பு கொள்ளுமாறு பீடாதிபதி கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று நடைபெறஏற்பாடாகியிருந்த மேற்படி நேர்முகத்தேர்வு வரும் 12 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்
- குறள்

## வலம்புரி

### நிதர்சனமான உண்மை

தென்மராட்சி பகுதியில் மக்கள் மீளக் குடியேறுவது தற்போதைக்குச் சாத்தியமில்லை என்ற கருத்தை இராணுவப்பேச்சாளர் சனத் கருணாரட்ன அறிவித்துள்ளார். மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் விதைக்கப்பட்டுள்ள தென்மராட்சி பகுதியில் மக்கள் மீளக் குடியேறுவது நல்லதல்ல என்ற தொனிப் பொருளில் இடம் பெற்றுள்ள அவரின் கருத்து யதார்த்தத்தின் வெளிப்பாடு என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே அறிவித்து விட்டனர். அவர்கள் தெரிவித்துள்ள காரணத்திலும் மிதிவெடிகள் கண்ணிவெடிகள் என்ற முக்கிய விடயம்சுட்டிக் காட்டப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் தென்மராட்சி மக்கள் இடம் பெயர்ந்து பெரும் இடர்களைச் சந்தித்து வருகின்றனர் என்பது உண்மையே. இம் மக்கள் மீளவும்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதாயின் ஒரு சுமுக நிலை ஏற்பட வேண்டும். இச் சுமுகநிலை ஏற்பட்டு மக்கள் தம் இடங்களுக்குத் திரும்புவதாயின் யுத்தம் ஓய்ந்து போவது மிகவும் அவசியமாகும்.

இச் சூழ்நிலையை ஏற்படுத்தும் பொறுப்பு அரசினுடையதே, விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ள போது அரசு இணங்கியுத்த நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தால் அது இலங்கை நாட்டிலிருந்து யுத்தத்தை ஒழிப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும்.

போர் ஓய்ந்து- நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் தென்மராட்சிப் பகுதிமக்கள் மட்டுமல்ல இடம் பெயர்ந்திருக்கும் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் தங்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பி விடுவர் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழும் வழி மீண்டும் கிடைக்கும். ஆனால் இவற்றை-இடம்பெயர்ந்த மக்களின் உள்ளத்தில் எழும் சொந்த மண்ணின் ஆசையை அரசாங்கம் உணர்ந்து கொண்டால், இடம் பெயர்ந்த தென்மராட்சி மக்களை மீண்டும் அங்கு குடியமர்த்த உண்மையாக விரும்பினால் இன்னமும் யுத்த நிறுத்தத்திற்குக் கை உயர்த்த முடியும்.

# யாழ்.பல்கலையில் உதயன்செய்தியாளர்தாக்கப்பட்டதால்
# பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றுவதை
# வடஇலங்கை பத்திரிகையாளர்சங்கமே தடுத்தது!

யாழ். பல்கலைக் கழக சமூகத்தால் நேற்று முன்தினம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் உயர்கலைக் கல்லூரியில் நடத்தப்பட்ட எழுச்சிக் கூட்டத்தில் வலம்புரியைப் பற்றி மாணவன் ஒருவர் கேள்வியெழுப்பினார். அதற்குப் பதிலளித்த யாழ். பல்கலைக்கழக மாணவன் வலம்புரிப் பத்திரிகை தமது எழுச்சிப்போரை மழுங்கடிப்பதாகவும் அதனை ஓர் கட்சி பத்திரிகையென்ற கோதாவிலும் தனது பிரச்சாரத்தை முடுக்கி விட்டார்.

கேள்விகேட்ட மாணவன் வலம்புரியின் ஆண்டுவிழாமலரில்அதன்தோற்றம்பற்றி எழுதப்பட்டிருந்த அம்சம் பற்றியே கேட்டிருந்தார். அதற்குப் பதிலளித்த பல்கலைக் கழக மாணவன் தான் அதனை வாசிக்க வில்லை என்று கூறிவிட்டு வலம்புரி தமது எழுச்சிப்போரை மழுங்கடித்து வருவதாகத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் ஒரு மாணவன்-ஒழுங்காக பத்திரிகை வாசிக்க முடியாதவர் முக்கியமான ஒரு கூட்டத்தில்-மாணவர்களின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாதென்பது உண்மையே அப்படியான அரைவேக்காட்டுத்தன மாணவர்களை உரையாட - விளக்கமளிக்க அனுப்பியது. பல்கலைக்கழகச் சமூகத்தின் பலயீனத்தையே சுட்டி நிற்கிறது.

### கைக் கூலிகள்

புனிதமான எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக அனுஷ்டிக்க வேண்டிய எழுச்சிப போரில் சில ஊடகங்களின் கைக்கூலிகளாக விலை போனவர்களை பிரச்சாரம் செய்ய விடுவது குறித்து இனிமேலாவது பல்கலைக்கழக சமூகம் விழிப்படைய வேண்டும்.

எழுச்சி பற்றி தனது வரையறைக்குள் நின்று பிரச்சாரம் செய்ய வேண்டியவர் தேவையற்ற விடயங்களைப் பற்றிக் கதைப்பது தனித்து வெட்டுப் புள்ளியை மட்டும் வைத்துக் கொண்டு பல்கலைக்கழகத் தெரிவு இடம் பெறுவதில் உள்ள தவறை அல்லது கம்பியூட்டர்கள் பாடப்புள்ளிகளைக் கூட்டும் போது விட்ட தவறையே உணர்த்தி நிற்கிறது.

## குருஷேத்திரம்

### பத்திரிகையாளர் மாநாடு

எழுச்சி நிகழ்வை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக சமூகம் கடந்த 6ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டினர். இப்பத்திரிகை மாநாட்டில் வலம்புரி கலந்து கொள்ளவில்லை ஏனெனில் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டுவதற்கு முதல் நாள் 5ம்ஆதிகதி உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் துரைசிங்கம் பல்கலைக் கழக மாணவர்களால் தாக்கப்பட்டார்.

இதனால் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாமெனவும், சகபத்திரிகையாளன் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறும் வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் வலம்புரியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

அதுமட்டுமன்றி இப்பத்திரிகையாளர் மாநாட்டில் உதயன் பத்திரிகை கலந்து கொள்ளாதெனவும், அப்படியாயின் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியிடத்தில் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினால் மட்டுமே உதயன் கலந்து கொள்ளுமெனவும் அதன் ஆசிரியர் தெரிவித்ததாக வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் வலம்புரிக்குத் தெரிவித்தது.

இதனையடுத்து ''ஊரோடினால் ஒத்தோடு'' என்ற முதுமொழிக்கமைய உதயன் பத்திரிகையின் செய்தியாளர் தாக்கப்பட்டதற்காக பத்திரிகையாளர் மாநாட்டில் வலம்புரி கலந்து கொள்ளவில்லை.

ஆனால் உதயன் பத்திரிகையின் இணைஆசிரியர் என். வித்தியாதரன் அம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

சக பத்திரிகையாளன் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்று வலம்புரி மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருக்க உதயன் அதில் கலந்து கொண்டது. எனினும் அது உதயன் விட்ட தவறன்று ஏனெனில் உதயன் பத்திரிகை மாநாட்டில் கலந்து கொள்ளாதென்று வலம்புரிக்கு தெரிவித்தது வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கமேயொழிய உதயன் அன்று.

எனவே வலம்புரியை அன்று முதல் இன்று வரை நசுக்க முற்பட்டுவரும் வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவருக்கு இது பற்றி எடுத்துக் கூறினோம். ஆனால் அவர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார். உண்மை நிலையை வெளிப்படுத்த அவர் முன்வரவில்லை இதனால் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் தமது எழுச்சி போரை வலம்புரி மழுங்கடிப்பதாகக் கருதினர்.

பத்திரிகையாளர் சங்கம் அன்று முதல் இன்று வரை வலம்புரியை நசுக்க நயவஞ்சமாக செயற்பட்டு வருகிறது.

இது சங்கத்தின் எல்லா உறுப்பினர்களையும் குறித்து நிற்காது அங்கு நல்ல உள்ளம் கொண்டவர்களும் இருக்கிறார்கள்..

### வலம்புரியின் எழுச்சி செய்தி

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் எழுச்சி நிகழ்வு குறித்து கடந்த டிசம்பர் மாதம் 30ஆம் திகதி வலம்புரி பத்திரிகை தனது முன்பக்கத் தலைப்புச் செய்தியாக பிரசுரித்தது. மறுநாள் 31ஆம் திகதி தனது ஆசிரியத்தலையங்கத்தில் எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவாக எழுதியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சமூ

(8பக்கம் பார்க்க)

**விதுரன்**

# ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை
# திருவாதிரை நன்னாளில் போற்றுவோம்

**பேராசிரியர்**
**ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
(தலைவர், இந்து நாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

'சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன்தாள் வணங்கி' என மணிவாசகப் பெருந்தகை கூறியதற்கேற்ப நாம் உய்வுபெற எம் பெருமான் எம்மை ஆட்கொண்டருளும் புண்ணிய தினங்களில் மாசி மாதத்தில் வரும் மகாசிவராத்தி,ஆனிமாதத்தில் வரும் ஆனிஉத்தரம் மற்றும் மார்கழி மாதத்தில்வரும் திருவெம்பாவை நிறைவு நாளாகிய திருவாதிரை ஆகியவை குறிப்பிடத்தக்கவை.எம்பெருமான்-அபிஷேகப் பிரியன் ஆதலால் இத்தினங்களில் நடைபெறும் அபிஷேக ஆராதனைகளைக் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

### ஆதியும் அந்தமும்

மணிவாசகப் பெருமானின் திருவாசகத்தின் பொருள் தில்லைச் சிற்றம் பலத்தில் திருநடனம் புரியும் கூத்தபிரானே யாவர். எனவே திருவாதிரை நாளில் எமக்குக் கிடைக்கும் தெய்வீகக் காட்சி நடராஜப் பெருமானுடையதே. மணிவாசகர் திருவண்ணாமலையில் அருளிச்செய்த திருவெம்பாவையின் தொடக்கத்தில் போற்றும் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியையே' திருவெம்பாவை நாட்களில் நாம் பாடியும் புகழ்ந்தும் வாழ்த்தியும் பயனடைந்து வருகின்றோம்.

### பாவை நோன்பு

திருவெம்பாவை பாவை நோன்பு பற்றியது. இது அம்பாவாடல் என்றும் மார்சழி நீராடல் என்றும் சிறப்பு பெறும். திருவெம்பாவை பாவை நோன்போடு சைவ உண்மைப் பொருளும்அமையுமாறு அருளிச் செய்யப்பட்டதனால் இந்நாட்களில் வீதி தோறும் மட்டுமன்றி சிறப்பாக எம்பெருமானின் சந்நிதியிலும் இதனைப் பக்தியுடன் பாடி மனநிறைவு கொள்கின்றோம்.

'சேழில் பரஞ்சோதிகேழில் பரங்கருணை சேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ' என திருவெம்பாவை எட்டாம் பாடல் எம்பெருமானை வியந்து போற்றுவது இங்கு குறிப்பிடத்தக்கது. சிவனுக்குரிய நட்சத்திரமாகிய 'ஆதிரை' 'திழு' என்ற அடைபெற்று 'திருவாதிரை'எனச் சிறப்புப் பெறுவது, சிவனைப் பாடியருளிய நாவுக்கரசர் 'ஆதிரை நாள் உகந்தான்' என்றும் 'ஆதிரை நன்னாளன்' என்றும் குறிப்பிட்டுள்ளார். திருவாதிரை பற்றிக்கூறிய சேக்கிழார் பெருமான் 'மதியணி புனிதன் நன்னாள்' எனச் சிறப்பித்துள்ளார்.

### ஆதிரை நாள்

மார்கழி மாதம் தேவர்களுக்குரிய வைகறைப் பொழுதாகும். எனவே அவர்களும இறைவனை இக்காலத்திலேயே வழிபடுவர். மனிதர்களாகிய எமக்கும்இக்காலமே இறைவழிபாட்டிற்கு உகந்தது. ஆதிரை நன்னாளில் எம்பெருமானுக்குரிய அபிஷேக காலம் இரவாகும், தரிசன காலம் உதயமாகும். எம்பெருமானது நடராச திருமேனிக்கு நிகழும் அபிஷேக ஆராதனைகளைக்காண்பதே எமது திருவருட்பேறு எனச் சிந்தித்து சைவப் பெருமக்கள் ஆசார சீலராய் எம்பெருமானது சந்நிதியில் பக்திசிரத்தையுடன் வழிபட்டு மன நிறைவு கொள்வர். எம்பெருமானுக்கு நடைபெறும் திருவனந்தலும் ஆதிரை அபிஷேகமும் கூடிய திருவாதிரை வழிபாடு சிறப்புடையது என்பதை 'ஆதிரை நாள் காணாது போதியே எம் பூம் பாவாய்' என்ற திருஞான சம்பந்தரது தேவாரமும் திருநாளைப் போவார்வரலாறும் எடுத்துக் கூறுகின்றன. மார்கழி ஒருநாளில் நடக்கும் ஒரு வேளைப் பூசைப்பலனுக்கு ஏனைய ஆயிரம் நாட்பூசைப் பலன் சமம் என்பது ஆகம விளக்கமாகும், ஆதிரை நன்னாளில் இறைவனது தெய்வீகக் கோலம் ஆர்த்திரா தரிசனம் எனச்சிறப்பிக்கப்படுகின்றது. பழந்தமிழிலக்கியங்களில் ஒன்றாகிய பரிபாடல் மார்கழிச் சிறப்பையும் ஆதிரையின பெருமையையும் சிறப்பித்துக் கூறுகின்றது.

'மாயிருந் திங்கள் மறுநிரை
-ஆதிரை
விரிநூல் அந்தணர் விழிவு
-தொடங்கும்
புரிநூல் அந்தணர்
-பொலங்கலம் ஏந்தினர்'

என்ற பாடலில் சிறப்பு வாய்ந்த மார்கழி மாதத்தில் முழுநிலாக் காலமாகிய பூரணையையடுத்து வரும் திருவாதிரை நாளில் மெய்நூலாகிய வேதங்களை நன்குணர்ந்த அறவோர் திருவாதிரைக்குரிய தெய்வமாகிய சிவபெருமானுக்கு திருவிழாச் செய்ய அவ்விழாவில் முப்புரிநூல் அணிந்த அந்தணர்கள் சிவபெருமானது வழிபாட்டுக்குரியதான பொருட்கள் நிரப்பப்பட்ட பொற்கலங்களை ஏந்துவர் 'என்ற விளக்கம் தரப்படுகின்றது. மணிவாசகப் பெருமான் ஆற்றுப்படுத்தியவாறு இத்தகைய புனித்தத்துவம் மிக்க திருவாதிரை விழாவில் பங்கு கொண்டு எம்பெருமானின் திருவருளுக்கும் பாத்திரராவோமாக!

'ஞாலம் நின் புகழேமிக
-வேண்டும் தென்
ஆல வாயில் உறையும் எம்
-ஆதியே'

### காணாமல்...

சம் பிலிப்பையா தேவராஜ் மரியாம்பிள்ளைஜெய ரா சா இதுகுறித்து பருத்தித்துறை ஈ·பி·டி.பிஅலுவலகம் அமைச்சர்டக்ளஸ்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ·23)

### சந்தேக---

ளார்.

அடையாள அணிவகுப்பின் போது 25 பேர் இதில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-23)

# எழுச்சிப் போருக்கு யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகள் ஆதரவு

தமிழ்மக்களின் அபிலாசைகளைசர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் குடாநாட்டுமக்களின் கருத்துக்களைத் திரட்டும் பல்கலைக்கழக சமூகத்தின் எழுச்சிப் போருக்கு ஆதரவுதெரிவிக்கும் தீர்மானமொன்று நேற்றுமுன்தினம்நடைபெற்ற மனிதநேய அமைப்புக்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்மாவட்ட அரச சார்பற்றிணையக் காரியாலயத்தில்இடம்பெற்ற இக்கூட்டத்தில் சுமார்47மனிதநேய அமைப்புக்கள் கலந்து கொண்டன.

இதேவேளை எதிர்வரும் 17ம்திகதி யாழ் பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் இவ்வமைப்புக்கள் கலந்து கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [இ]

## மின்சாரம் தாக்கி பெண் மரணம்

சட்ட விரோதமான முறையில்மின்சார இணைப்பைப் பெற முயன்ற நான்கு பிள்ளைகளின் இளந் தாய் ஒருவர்மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளார்.

துன்னாலை குடத்தனையைச் சேர்ந்த செல்லத்தம்பி மகாராணி (வயது-25) என்பவரே இவ்வாறு பலியானவராவர் இவரை காப்பாற்ற முற்பட்ட இவரதுதம்பியார் மணியம் சயந்திரன் (வயது 19) காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இறந்தவரின் சடலம் விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-23)

### புலிகளை...

வரப்பட்டு ஐ.சி.ஆர்.சியின் யாழ்நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதேவேளை வன்னியில் இருந்து யாழ்வந்த மேற்படி மீனவர்களை இராணுவத்தினர் விசாரணைக்காக அழைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (இ-110)

### புலிகளின்-..

சியல் அமைப்பினை மாற்றி அமைத்து தமிழ் மக்களுக்கு சம வாய்ப்பு வழங்கவே அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது

ஐ.தே.கட்சி இதனை ஆதரித்தால் என்ன? ஆதரிக்கா விட்டால்என்ன? அரசியல் அமைப்பினை மாற்றி அமைத்து அதனை நிறைவேற்றியே தீருவோம்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்பதையே அரசாங்கம் விரும்புகின்றது. யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வர அரசு விடும் அழைப்பினை ஏற்குமாறு விடுதலைப் புலிகளை வடபகுதி மக்கள் நிர்ப்பந்திக்க வேண்டும்.

யுத்த நிறுத்தம் என்பது பேச்சுவார்த்தை, மற்றும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை விடுத்து மெறுமனே மேற்கொள்ளப் படுவது பிரயோசனமற்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி உலகில் எல்லா நாடுகளிலும் காணாமல் போகும் சம்பவங்கள் இடம்பெற்றுவருகிறது. எமது நாட்டில் நடைபெறும் சம்பவம் தொடர்பாக அவற்றைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஜனாதிபதி நேரடியாக நிராகரித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். (வ)

### யாழ்..

டத்தில் ஆதரவு பெருகிவருவருவதாகவும் தெரிவிக்கபடுகிறது.

இதேவேளைஇம்மாதம் 17ந்திகதி பல்கலைக்கழகத்தில்இடம்பெறவுள்ளபொங்குதமிழ்எழுச்சி'நிகழ்வில் யாழ் குடாநாட்டுமக்களைக்கலந்து கொள்ளுமாறுபல்கலைக்கழக சமூகத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [வ]

### ஜே.வி.பி...

பாட்டப்பேரணி, ஜனாதிபதி மாளிகை நோக்கிசெல்ல முற்படுகையில் அதனை கடமையிலிருந்த பொலிசார் தடுத்தனர்.

பொலிசாரின் உத்தரவை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைநோக்கிச் செல்ல முற்பட்டனர்.

இதனால் பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர் மீது தடியடி மற்றும்கண்ணீர் புகைக்குண்டுகளைவீசிபேரணியைதடுக்க முற்பட்ட வேளையிலேயே25 ஆர்ப்பாட்டக் காரர்கள்காயமடைந்தனர்.

மேற்படி சம்பவந்தில் மேல்மாகாணசபைஜே வி பிஉறுப்பினர்சமர சிங்கபலத்தகாயங்களுக்குஉள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-[illegible])

### பத்திரிகையாளர்...

கத்தின் எழுச்சி நிகழ்விற்கு முதன் முதலில் குரல் கொடுத்த வலம்புரியை ''மழுங்கடிப்பதாகக்'' கூறிய அந்த நன்றி கெட்ட மாணவன் நிச்சயமாக சுயநினைவுடன் இருந்திருக்க நியாயமில்லை, பத்திரிகையின் உண்மை நிலையை எவராலும் மறைக்க முடியாது ஏனெனில் அவற்றின் பதிப்புக்களே அதற்கு ஆதாரமாகும். என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்த விரும்புவதுடன் - எம் உடன்பிறப்புக்களின் தியாகத்தை வலம்புரி உணர்வு பூர்வமாக வெளிப்படுத்த என்றும் தயங்கப் போவதில்லை என்பதையும் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.


## மஞ்சள்நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்:

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் மார்கழி மாதம் 27ஆம் நாள் (11-01-2001) வியாழக்கிழமை முற்பகல் 11 00 மணி முதல்12.30மணிவரையுள்ள மீன லக்கின சுபவேளையில்:

எமது புத்திரி திருநிறை செல்வி

**மஜிந்தினி**

அவர்களுக்கு சட்டநாதர் வீதி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
195 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி சிவானந்தம்
நாவற்குழி, கைதடி.

முக்கிய குறிப்பு:-
இடம்பெயர்வினால் தனித்தனி அழைப்பு அனுப்ப முடியவில்லை இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(கி-1317)



## Jaffna Technical Institute
**Jaffna - sriLanka**

Regd. NO. 15251 T. P. 3335

# தொழிற் பயிற்சிகள்

★ **Radio, T. V. and Video Deck Repairing**
சகல இன ரேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

★ **Motor Rewinding and Electrical Wiring**
சகல இன மோட்டார், (F) பான் ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)

★ **Motor Cycle MechaniSam**
சகல இன மோட்டார்சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 5 மாதங்கள்)

★ **Air Conditioning and Refrigeration**
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதம்)

★ **city and Guilds of London Exam**
(1) Power (2) Electronics

NOTE: எமது நிறுவனத்தில் தொழிற் பயிற்சிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் சகல மாணவர்களையும் 11-01-2001 முன்னர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
முன்னர் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களும் மற்றும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்களும் அனுமதி அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.

புதிய பயிற்சிகள் ஆரம்பம்-
15 . 1 . 2001 (கிழமைநாட்களில்)
20 . 1 . 2001 (சனி, ஞாயிறு நாட்களில்)

**மேலதிக விவரங்களுக்கு நேரில்**
- DIRECTOR

52/1 STANLEY ROAD,
JAFFNA.
(றெயில்வே கடவை அருகில்)

NO. 7. PALALY ROAD,
JAFFNA

(கி/1310)



## ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)

விஜயகாந்த், ராதிகா
ராதாரவி
நடித்த

**உழைத்து வாழவேண்டும்**

10-30, 2-30 (ப. நே)



அன்புடன் அழைக்கின்றோம் **அமுல் கிறீம்கவுஸ் AND பேக்கரி** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம் கி/1316


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.